**ஹொறண பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதியும் திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹொறண பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 11,698,675 தொகையான மீதியொன்று திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய வரவுப் பதிவு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட 2.2.1(ஈ) இன் கணக்கீட்டுக் குறைபாடுகள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2002 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,398,988 தொகையான பெறுமதிசேர் வரித்தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

உரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 34,793,939 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | | |
| | (i) 134(1) ஆம் பிரிவு | - | அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் சபையினால் ஆதனவரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 154(1) ஆம் பிரிவு | - | சபை அதிகாரப்பிரதேசத்தில் காணி ஏல விற்பனை செய்யும் போது ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்ற காணிகளின் விற்பனை விலையில் 1 சதவீத வருமானம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 63,674,172 | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவு | 635,045 | அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பங்களிப்புப் பணம் அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் தாமதமாக அனுப்பப்பட்டமையின் காரணமாக தண்டப்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 635,045 தொகையை அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,900,792 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 10,485,433 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 15,528,874 | 13,102,390 | 13,939,952 | 3,745,463 | 15,432,100 | 14,496,868 | 12,077,553 | 4,583,025 |
| வாடகை | 3,682,000 | 2,008,955 | 1,744,816 | 264,139 | 3,477,000 | 1,994,251 | 1,901,081 | 93,720 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,096,625 | 907,339 | 871,338 | - | 1,047,000 | 916,192 | 916,192 | - |
| ஏனைய வருமானம் | 106,990,400 | - | 58,474,463 | - | 75,721,900 | - | 57,626,130 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 4,676,745 ஆக இருந்ததுடன் ஆண்டின் சிட்டையிடல் ரூபா 16,018,685 ஆக இருந்தது. ஆண்டின் பெறுவனவுகள், பதிவழித்தல்கள் மற்றும் சீராக்கல்கள் ரூபா 16,685,828 ஆனமையால் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 4,009,602 ஆகும்.

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### (அ) ஆதன வரி

(i) மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் ரூபா 4,507,492 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 2,733,734 தொகை அதாவது 61 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆதனவரி சிட்டையிடல் வருமானம் ரூபா 9,071,879 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 7,434,814 தொகை அதாவது 82 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,410,822 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரை 1055 அலகுகளிலிருந்து ரூபா 1,163,437 தொகை, 03 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரை 212 அலகுகளிலிருந்து ரூபா 271,277 தொகை, 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை 573 அலகுகளிலிருந்து ரூபா 704,403 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட 348 அலகுகளிலிருந்து ரூபா 441,356 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூா 75,533 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 45,040 தொகை அதாவது 60 சதவீதம் அறவிடப்பட்டமையால் மேலும் ரூபா 30,493 மீதியொன்று அறவிடவேண்டியிருந்தது.

**2.2.4 ஏனைய வருமானம்**

---------------------------------

**மோட்டார் வாகனம் தரித்து வைத்தல் கட்டணம்**

---------------------------------------------------------------------------------

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் கட்டணத்தை அறவிடுவதற்காக முச்சக்கர வண்டி தரித்து வைத்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட உதவிதி சபையினால் விதிக்கப்பட்டிருந்த போதிலும், முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கப்படுகின்ற இடங்களைக் கண்டறிந்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,261,328 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 59,270,556 ஆகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------------

**3.1 செயலாற்றல்**

----------------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

--------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் செயற்திட்டத்தின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 04 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

-------------------------------------------------------

2017 ஆம் ஆண்டில் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக சபையினால் ரூபா 30,510,949 தொகையான செலவினமொன்று செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கோ அல்லது குறைத்துக் கொள்ளும் வகையில் தேவையான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக உபவிதியொன்று விதிக்கப்படாதிருந்ததுடன் கழிவுப்பொருள் கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்காக கழிவுப்பொருள் வரி விதித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 ஏப்ரல் 23 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

(i) இரண்டாம் நிலையில் 06 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஒருவர் மிகையாகக் காணப்பட்டார்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 06 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படாத போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை அதிகரித்துக் கொள்ளாமல் நிரந்தர ஊழியர்களாக 43 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

**(ஆ) ஊழியர் கடன்**

சேவையிலிருந்து விலகிச் சென்ற 06 ஊழியர்களிடமிருந்து 2014 ஆம் ஆண்டு முதல் ரூபா 18,700 தொகையான கடன் மீதி அறவிட வேண்டிக் காணப்பட்டது.

**3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

கனன்வில உப அலுவலகம் மற்றும் பொக்குனுவிட்ட உப அலுவலகம் என்பவற்றில் நிர்மாணங்கள் முடிவடைந்த 285 கட்டிட விண்ணப்பங்கள் காணப்பட்ட போதிலும், அதில் 28 பேர் மாத்திரம் தரச்சான்றிதழ் பெற்றிருந்ததுடன் ஏனையவைகளுக்காக தரச்சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 கையேற்கப்படாத சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான வெலபடவத்த பகுதி, போறுவதன்ட, பூவக்வத்த நொஹொத் பண்டாரவத்த மற்றும் கனத்தவத்த பகுதி போன்ற காணிகள் மற்றும் அவற்றின் கட்டிடங்களின் உரித்தை வெளியிடுவதற்கு உரித்துறுதி மற்றும் வெளியிடப்பட்ட உரித்துறுதிகள் சபையிடம் காணப்படவில்லை.

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

ஹொறண சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் மூலம் நடாத்தப்படுகின்ற சிகிச்சை நிலையத்தில் பங்குபற்றுகின்ற சபையிலில்லாத 09 தொழிலாளர்களுக்காக சபை ரூபா 677,299 தொகையினைச் செலுத்தியிருந்தது.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) ஜேசீபீ இயந்திரம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இயந்திரப் பொறியியலாளரின் சிபாரிசு மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் பழுதுபார்த்தல் இடம்பெற்ற போதிலும் 2016 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை அவ்வவ்போது பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 1,613,393 தொகை

செலவிடப்பட்டிருந்தது. இயந்திரத்தின் குறைபாடுகளை ஒரே தடவையில் பரீட்சித்து பழுதுபார்த்தல் இடம்பெற்றிருக்குமாயின் இந்த செலவினங்களை குறைத்துக் கொள்வதற்கும் வாகனத்தை வினைத்திறனாக சேவையில் ஈடுபடுத்தவும் முடிந்திருக்கும்.

(ஆ) வெள்ளத்தினால் பாதிப்பிற்குட்பட்ட மக்களுக்காக உதவிகளை வழங்குவதற்காக படகு செயற்படுத்துனராக சேர்க்கப்பட்ட ஊழியருக்காக அந்தப் பணிகள் முடிவடைந்த பின்னரும் சம்பளமாக ரூபா 228,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) போதியளவான நிரந்தர மற்றும் அமையத் தொழிலாளர்கள் காணப்படும் போது நாளொன்றிற்கு ரூபா 1,000 படி செலுத்தும் அடிப்படையில் பயிற்சி பெறாத ஊழியர்களை ஈடுபடுத்தியதற்காக 3,888,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.7 பெறுகைகள்

வோல்ட் 23 CFC மின்குமிழ்களைக் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலை சமர்ப்பித்த வழங்குனர்களுக்கிடையே தெரிவு செய்யப்பட்ட வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் மாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த கூறுவிலைகளைத் திறந்த குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்காக தெரிவு செய்தலிலுள்ள தாமதத்தின் காரணமாக வோல்ட் 23 CFC மின்குமிழ் கொள்வனவின் போது ரூபா 20,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமமானம் 10 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையும், செலவினம் 17 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | கணக்கு அறிக்கைகள் சரியாக சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக சில வருடங்களாக திருத்தப்பட்ட கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டி ஏற்பட்டமை. |
| (ஆ) | சொத்துக்கள் / ஆதனங்கள் | (i) | உரித்துறுதி பெறப்படாமை |
| | | (ii) | பதிவேடுகளில் ஆதனங்களின் பெறுமதி காண்பிக்கப்படாமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் | / | (i) | பட்டோலைகள் தயாரிக்கப்படாமை |
| | | | (ii) | காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை |
| (ஈ) | பதவியணியினர் முகாமைத்துவம் | | (i) | பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்படாமை |
| | | | (ii) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | | | (ii) | வருமான மதிப்பீடு பொருத்தமானதாக இன்மை. |